சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி “தேமதுரத் தமிழோசை உலகமெலாம்” புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 171 | 15.12.2025 | MONDAY | KARTHIGAI : 29 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 171 | 15.12.2025 | திங்கள்கிழமை | கார்த்திகை : 29 | விலை : ரூ.5/–

3 தவெக வேட்பாளர்கள் அறிவிப்பா? ஊடக கணிப்புகளுக்கு புஸ்ஸி ஆனந்த் பதில்

4 அமித் ஷா முதல் விஜய் வரை: தி.மலையில் உதயநிதி ‘அட்டாக்’ பேச்சு

2 சென்னையில் களைகட்டும் கச்சேரி உணவகங்கள்

# “விடுபட்ட தகுதியான மகளிருக்கு உரிமைத் தொகை நிச்சயம் கிடைக்கும்” முதல்வர் ஸ்டாலின் உறுதி

தருமபுரி: டிச.15-

“தகுதியுடைய விடுபட்ட பெண்களுக்கு நிச்சயமாக உரிமைத் தொகை கிடைக்கும்” என பாப்பிரெட்டிப்பட்டி அருகே முன்னாள் அமைச்சர் பழனியப்பன் இல்லத் திருமண விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் உறுதியளித்தார்.

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. பழனியப்பன் இல்லத் திருமண விழா இன்று பாப்பிரெட்டிப்பட்டி அருகேயுள்ள மோளையானூர் கிராமத்தில் நடைப்பெற்றது. விழாவுக்கு தலைமை தாங்கிய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ,மணமக்கள் எழில்மறவன் கிருத்திகா திருமணத்தை நடத்தி வைத்தார்.

பின்னர் முதல்வர் ஸ்டாலின் மணமக்களை வாழ்த்தி பேசுகையில், “தொடர்ந்து அரசு நிகழ்ச்சிகள், புதிய ,புதிய திட்டங்களை தொடங்கி வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள், அது மட்டும் இல்லாமல் கட்சியின் நிகழ்ச்சிகள், ஆய்வுக் கூட்டங்கள், கழக குடும்பங்களில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள் இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள். இவ்வாறு ஏராளமான நிகழ்ச்சிகளுக்கு இடையில் உங்களை எல்லாம் பார்க்கும் வகையில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியால் எனக்கே ஒரு ரிலாக்ஸ் ஏற்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ என்ற தலைப்பில் ஒரு மாபெரும் நிகழ்ச்சி. அதேபோல மகளிர்களுக்கான கலைஞர் பெயரால் வழங்கப்படக்கூடிய மகளிர் உரிமைத் தொகை கூடுதலாக 17 லட்சம் பேருக்கு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளேன். இதனோடு ஏற்கெனவே 1 கோடியே 13 லட்சம் பேருடன் மொத்தமாக 1 கோடியே 30 லட்சம் பேருக்கு உதவித் தொகை வழங்கியுள்ளோம். இன்னும் தகுதியுடைய விடுபட்ட மகளிர்க்கும் நிச்சயம் வழங்கப்படும்.

ஜிடிபி வளர்ச்சியில் இன்று தமிழ்நாடு தான் நம்பர் ஒன் மாநிலமாக உருவாகியுள்ளது என ரிசர்வ் வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. எவ்வளவோ சோதனைகள், அந்த சோதனைகளை எல்லாம் தாண்டி தமிழக அரசு சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கிறது தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சி.

எஸ்ஐஆர் பணியில் பம்பரமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். நமது வாக்குரிமையை நாம் காப்பாற்றி ஆக வேண்டும். அதற்காக எஸ்ஐஆர் பணிகளில் விழிப்போடு வேலை பார்த்திருக்கிறோம். அதே நேரத்தில் பாதி வேலை தான் முடிந்து இருக்கிறது. இன்னும் பாதி வேலை அப்படியே உள்ளது. தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை முடிந்து ரிசல்ட் அறிவிக்கும் வரை வேலை பாக்கியுள்ளது.

தேர்தலுக்கு இன்னும் கொஞ்ச நாள்தான் உள்ளது. நமது சாதனைகள், திட்டங்கள், பணிகளை மக்களுக்கு கொண்டு சென்று வாக்குகளாக மாற்ற வேண்டும். 7வது முறையாக திராவிட மாடல் ஆட்சி வந்தது என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருக்கும்போது சட்டமன்றத்தில் பேசும்போது கண்ணியமாகவும், ஜனநாயக முறையிலும் பொறுப்பாக பதில் சொன்னவர் அன்றைய அமைச்சராக இருந்த பழனியப்பன் மட்டும்தான்” என்றார்.

விழாவில் அமைச்சர்கள் எம் ஆர் கே . பன்னீர் செல்வம், , சாமிநாதன், ராஜேந்திரன், சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், முன்னாள் இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி மாநில பொது செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



## வள்ளியூர் கடை வீதிகளில் அதிமுக அமைப்பு செயலாளர் தலைமையில் துண்டு பிரசுரம் விநியோகம்

திசையன்விளை.டிச.15

திருநெல்வேலி புறநகர் மாவட்ட அம்மா பேரவை சார்பில், இராதாபுரம் சட்டமன்ற தொகுதி ,வள்ளியூர் பேரூராட்சி கடை வீதியில் திமுக அரசை கண்டித்து துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கும் , வியாபாரிகளுக்கும் கழக அமைப்பு செயலாளர் ஏ கே சீனிவாசன் தலைமையில், மாவட்ட கழக பொருளாளர் முன்னாள் எம்.பி சௌந்தர்ராஜன்,வள்ளியூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் லாசர் ஆகியோர் முன்னிலையிலும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருநெல்வேலி புறநகர் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாவடி காமராஜ் செய்திருந்தார் . இந்நிகழ்ச்சியில், வள்ளியூர் நகரக் கழகச் செயலாளர் பொன்னரசு,பணகுடி நகர கழக லாரன்ஸ், பொதுக்குழு உறுப்பினர் செழியன், வள்ளியூர் வடக்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் .கோபாலகிருஷ்ணன், வள்ளியூர் முன்னாள் யூனியன் துணைத் தலைவர் பொன் செல்வன், ராமர்,வள்ளியூர் நகர துணைச் செயலாளர் கருப்பசாமி, மாவட்ட இளைஞர் பாசறையின் செயலாளர் இந்திரன், டேவிட் ராஜா, எட்வர்ட் சிங், சந்திர மோகன், முத்துலட்சுமி, ரத்தின கலா,இளையபெருமாள், , வென்னிமலை யாதவ்,முத்துலிங்கம் பழக்கடை கோபால், போஸ்டல் முருகேசன், ஜோரிஸ், சுகந்தன்,பிரேம்குமார், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் ஸ்ரீ.ராம்குமார் உட்பட பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டத்தில் 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகப்கோப்பை விளையாட்டு போட்டிகளில் பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., வழங்கினார்.

## அலங்காநல்லூரில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பிறந்தநாள் விழா





அலங்காநல்லூர். டிச.15

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீ முனியாண்டி கோவிலில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பிறந்த நாளை முன்னிட்டு ஒருங்கிணைந்த ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் கோடீஸ்வரன். ரகு, ஜெயபாண்டி, ஆகியோர் தலைமையிலும் நகர செயலாளர்கள் ராஜபிரபு, பாலமேடு முருகன். முன்னிலையில் சிறப்பு பூஜைகள் செய்து பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கினர். இதில் அவைத்தலைவர் செல்வம். சந்திரசேகரன். பிச்சை. நீதி .மோகன். இன்பம். சோனை. ரவிச்சந்திரன். சந்துரு. கருப்பு. போத்தி. ராஜ் குமார். ராஜா,செந்தில்குமார், சுதந்திரபாண்டியன், ரமேஷ், சண்முகசுந்தரம், சக்திவேல், கவியரசு சோனை,ஆறுமுகம், உள்பட அமமுக மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

## திருப்பூர் மாநகர் மாவட்ட மண்ணரை பகுதி 34 வது வார்டு தமிழக வெற்றிக் கழக அலுவலக திறப்பு விழா

திருப்பூர், டிச.15-

திருப்பூர் மாநகர் மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் மண்ணரை பகுதி 34 வது வார்டு கழக அலுவலக திறப்பு விழா மாநகர் மாவட்ட செயலாளர் பாலமுருகன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து அன்னதானத்தை வழங்கி சிறப்பித்து உறுப்பினர் சேர்க்கை முகாமினை தொடங்கி வைத்தார் விழாவினை 34 வார்டு செயலாளர் பாலமுருகன் ஏற்பாடு செய்திருந்தார்

இந்த நிகழ்வில் கௌரவ தலைவர்கள் சடையப்பன். ஜோதிலிங்கம்.லோகநாதன் சிவக்குமார்.ஈஸ்வரன். தேவராஜ். பகுதி செயலாளர் யுவராஜ். பகுதி இணைச் செயலாளர் சாமிநாதன் பொருளாளர் செந்தில் குமார் துணை செயலாளர்கள் மணிகண்டன்.ஜெயக்குமார்.34 வது வார்டு நிர்வாகிகள் இணைச்செயலாளர் நிவாஸ் பொருளாளர் கார்த்திக் துணைச் செயலாளர்கள் கணேஷ் சுதன் இணைச் செயலாளர்கள் பிரவீன் தினேஷ் அமைப்பாளர்கள் காண்டீபன். மகேந்திரன் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மகளிர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் வினிதா இணை அமைப்பாளர்கள் சுபா. மீனாட்சி.வினோதா. உறுப்பினர் சேர்க்கை அணி கார்த்திகா.மகேஸ்வரி. பேச்சாளர் சபரி. உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பெரும் திரளாக பங்கேற்றனர்.





# சென்னையில் களைகட்டும் கச்சேரி உணவகங்கள்

சென்னை, டிச.15-

சென்னையில் இசை விழா களைகட்டத் தொடங்கிவிட்டது. மியூசிக் அகாடமி, மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப், ஸ்ரீபார்த்த சாரதி சுவாமி சபா, நாரதகான சபா, ஆர்.ஆர்.சபா, இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா, பிரம்ம கான சபா, ஸ்ரீ கிருஷ்ண கான சபா, பாரதிய வித்யா பவன் உள்ளிட்ட பெரும்பான்மையான சபாக்களில் இசைக் கச்சேரிகளும் கருத்தரங்குகளும் தொடங்கிவிட்டன. செவிக்கு உணவுடன் வயிற்றுக்கும் உணவு கிடைத்தால் இசை ரசிகர்களுக்கு கொண்டாட்டம்தான்.



சென்னை இசை விழாக்களின் பாரம்பரியம் 1930களில் தொடங்கியது. மெல்ல மெல்ல 1940 களில் கச்சேரி நடைபெறும் இடங்களில் உணவகங்கள் உருவாகத் தொடங்கின. சென்னையின் 'சபா உணவக பாரம்பரியம்' 85 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது என்றே சொல்லலாம்.

அறுசுவை நடராஜன் கேட்டரிங், மவுண்ட் பேட்டன் மணி ஐயர் கேட்டரிங், நம்ம வீட்டு கல்யாணம் கேட்டரர்ஸ், ஸ்ரீ ஜெய ராக வேந்திரா கேட்டரர்ஸ், சேஷா கேட்டரர்ஸ், மீனாம்பிகா கேட்டரர்ஸ், ஞானாம்பிகா கேட்டரர்ஸ், வீனஸ் கேட்டரிங் சர்வீசஸ், மைலாப்பூர் ஸ்ரீ சங்கரா கேட்டரர்ஸ், எல்.வி. பட்டப்பா கேட்டரிங், மிண்ட் பத்மநாபன் கேட்டரிங், அனு கேட்டரிங் சர்வீசஸ் என்று உணவகங்கள் தொடர்ந்தன. இன்னும் சாஸ்தா கேட்டரிங், ஸ்ரீ சாஸ்தாலயா கேட்ட ரிங், ஏபிசி கேட்டரிங், சத்வா கேட்டரிங் சர்வீஸ் என்று பட்டியல் நீள்கிறது.

கச்சேரி உணவகங்கள் தொடர்பாக கூல் ஈவென்ட்ஸ் குழுவின் ஓர் அங்கமாக விளங்கும் சத்வா கேட்டரிங் சர்வீஸின் நிறுவனர் ஆர்.எஸ்.குமார் கூறும்போது, “ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா (வாணி மகால்) மற்றும் ஸ்ரீ கிருஷ்ண கான சபாவில் தற்போது உணவகம் அமைத்துள்ளோம்.

இந்த உணவகங்களில் தினமும் மதியம் 12 முதல் 2.45 மணி வரை தலை வாழை இலை விருந்து (கல்யாண விருந்து) அளிக்கப்படுகிறது. மாலை 4.30 முதல் 6.30 மணி வரை ஸ்வீட், பஜ்ஜி, வடை வகைகள் அளிக்கப்படுகின்றன. இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை அடை அவியல், தோசை வகைகள், சப்பாத்தி, சேமியா ரவா பாத் உள்ளிட்டவை கிடைக்கும். தினம் தினம் மெனு மாறிக்கொண்டே இருக்கும்.

இசை ரசிகர்களின் மேலான கருத்துகளை ஏற்று, ஏதேனும் குறைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்வோம். அனைத்து உணவு வகைகளையும் அனைவருக்கும் ஏற்ற விலையில் கொடுப்பதற்கே விரும்புகிறோம். இசை ரசிகர்கள், உணவுப் பிரியர்களின் திருப்தியே எங்கள் நோக்கம். எங்கள் உணவு அரங்கில் இசைக் கச்சேரி, சாப்பாட்டுக் கச்சேரியுடன் நடைபெறும் அரட்டைக் கச்சேரியும் சுவாரசியம்தான்" என்றார்.

# ராகுலுக்கு பதிலடி கொடுத்த அமித் ஷா!

சென்னை, டிச.15-

பார்லிமென்ட் கூட்டத்தொடர் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வந்தே மாதரம் மற்றும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி தொடர்பான விவாதங்களும் நடைபெற்று முடிந்தன.




இதில், 'ஓட்டு திருட்டு குற்றச்சாட்டில் மத்திய அரசை ஒரு வழியாக்கி விட்டார், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரான ராகுல். குறிப்பாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை டென்ஷனாக்கி விட்டார்' என, காங்கிரசார் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இந்த விவகாரத்தில், காங்கிரசின் குற்றச் சாட்டுகளுக்கு அதிரடியாக பதில் அளித்தார், உள்துறை அமைச்சர் அமித் ஷா; ஆனால், அதைக் கேட்காமல் காங்கிரஸ் வெளிநடப்பு செய்துவிட்டது. அமித் ஷாவிற்கு லேசான காய்ச்சல்.

இதனால், அவரின் உடல்நிலையைக் கண்காணிக்க, இரண்டு டாக்டர்கள் லோக்சபாவிற்கு வெளியே, 'லாபி'யில் காத்திருந்தனர். 'நீங்கள் அதிகம் பேச வேண்டாம்; ஓய்வெடுக்க வேண்டும்' என, டாக் டர்கள் ஆலோசனை அளித்தனர்; ஆனால், அதையெல்லாம் நிராகரித்து விட்டார் அமித் ஷா. ராகுலுக்கு சரியான பதிலடி கொடுப்பதற்காக, ஆராய்ச்சி செய்து பலவித ஆவணங்களை எடுத்துக்காட்டி, ஆட்சி யில் இருந்த போது காங்கிரஸ் என்னவெல்லாம் செய்தது என்பதை விலாவாரியாக விளக்கினார் அமித் ஷா.

அவருடைய பேச்சு முடிந்ததும், லாபியில் உள்ள டாக் டர்கள் அமித் ஷாவின் உடல்நிலையைப் பரிசோதித்தனர். அதில், அவருடைய ரத்த அழுத்தம் அதிகமாக இருந்தது தெரிய வந்தது. 'ஓய்வு எடுங்கள்' என, மீண்டும் டாக்டர்கள் வலியுறுத்தினர். இருப்பினும், இரவு இரண்டு முக்கிய ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்றார்

# சி.ஏ.ஏ., சட்டத்தில் அசாமில் முதல் முறையாக வங்கதேச பெண்ணுக்கு இந்திய குடியுரிமை

குவஹாத்தி:, டிச.15-

அசாமில் வசிக்கும் வங்கதேசத்தை சேர்ந்த 40 வயது பெண்ணுக்கு மாநிலத்திலேயே முதல் முறையாக இந்தியக் குடிரியுமை வழங்கப்பட்டுள்ளது. சி.ஏ.ஏ., எனப்படும் குடியுரிமை திருத்தச் சட்டம், 2019ல் அறிமுகம் செய்யப்பட்டது.




நிபந்தனைகள் இதன்படி, பாகிஸ்தான், வங்கதேசம் உட்பட நம் அண்டை நாடுகளில் சிறுபான்மையினராக இருந்து, துன்புறுத்தலுக்கு ஆளாகி, இந்தியாவில் தஞ்சமடைந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

ஹிந்து, சீக்கியர், பவுத்தம் போன்ற மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த சலுகை அளிக்கப்படுகிறது. இதற்காக, 5 ஆண்டு காலம் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் உள்ளன.

இந்நிலையில், வட கிழக்கு மாநிலமான அசாமின் சில்சாரைச் சேர்ந்த, 40 வயது வங்கதேச பெண், இந்தியக் குடியுரிமை கேட்டு கடந்தாண்டு விண்ணப்பித்திருந்தார். நம் அண்டை நாடான வங்கதேசத்தின் சிட்டகாங்க் பகுதியை சேர்ந்த அவர், குடும்ப உறுப்பினரின் சிகிச்சைக்காக, 2007ல் அசாம் வந்தார்.

நிராகரிப்பு ஸ்ரீபூமி நகரைச் சேர்ந்த இளைஞரை காதலித்து திருமணம் செய்து இங்கேயே தங்கிவிட்டார். இந்த தம்பதிக்கு ஒரு மகன் உள்ளார்.

கடந்தாண்டு லோக்சபா தேர்தல் தொகுதி மறுவரையறை காரணமாக, இவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து குடியுரிமை கேட்டு அவர் சார்பில் மீண்டும் விண்ணப்பிக்கப்பட்டது.

தற்போது , அவருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அசாம் மாநிலத்தில், சி.ஏ.ஏ., சட்டத்தின் கீழ், இந்தியக் குடியுரிமை வழங்கப்படு வது இதுவே முதல் முறை. இதேபோல், அசாமின் கச்சாரில் வசிக்கும் வங்க தேசத்தை சேர்ந்த 61 வயது ஆண் ஒருவருக்கும் இந்திய குடியுரிமை கிடைத்துள்ளது. அசாமைச் சேர்ந்த 40 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

# கடைசி போட்டியில் தோல்வியுடன் விடை பெற்றார் ஜான் சீனா

அமெரிக்கா, டிச.15-

WWE மல்யுத்த போட்டிகளில், 17 முறை சாம்பியன் பட்டத்தை வென்ற ஜான் சீனா, கடைசி போட்டியில் தோல்வியுடன் விடைபெற்றார்.

கிரிக்கெட் விளையாட்டிற்கு இந்தியாவில் தனி மவுசு இருப்பது போல WWE மல்யுத்த போட்டிகளுக்கு உலகம் முழுவதும் ரசிகர் பட்டாளம் உண்டு. இந்த போட்டிகளில் 17 முறை சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தவர் அமெரிக்காவை சேர்ந்த ஜான் சீனா.



*கடந்த 2002ம் ஆண்டு முதல் WWE மல்யுத்த போட்டிகளில் சிறப்பாக விளையாடியவர் என்ற பெருமை அவருக்கு உண்டு.

* அவர், அமெரிக்காவில் மல்யுத்த வீரர் கன்தர் உடன் நடக்கும் போட்டியே தன் கடைசி போட்டி என்றும், அதன் பிறகு ஓய்வு பெறப் போவதாகவும் அறிவித்திருந்தார். அப்படி நடந்த போட்டியில் 'டேப் அவுட்' முறையில் ஜான் சீனா தோல்வியை தழுவினார்.

*போட்டி முடிந்ததும், அவர் ரசிகர்களுக்கும், தன்னுடன் மோதிய வீரர்களுக்கும் நன்றி தெரிவித்தார். அரங்கில் இருந்த ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி ஜான் சீனாவுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# அதிகாலையில் பனிமூட்டம் இருக்கும்: வானிலை மையம் தகவல்

சென்னை, டிச.15-

தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகாலை ஓரிரு இடங்களில் பனிமூட்டம் காணப்படும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.




இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் நாளை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரியில் நாளை (டிச.,15) அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். தமிழக கடலோரப்பகுதிகள், தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் டிசம்பர் 16ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஈரோட்டில் விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு போலீசார் அனுமதி

ஈரோடு, டிச.15-

ஈரோட்டில் வரும் 18 ம் தேதி நடக்க உள்ள தவெக தலைவர் விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு போலீசார் அனுமதி வழங்கியுள்ளனர்.



தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய், கரூர் சம்பவத்துக்கு பின், மக்கள் சந்திப்பு பயணத்தை மீண்டும் துவங்கி உள்ளார். காஞ்சிபுரம், புதுச்சேரியில் பிரசாரம் செய்த அவர், வரும் 18ம் தேதி, ஈரோட்டில் பயணம் மேற்கொண்டு, பிரசாரம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், விஜயமங்கலம் டோல்கேட் அருகே, விஜயபுரி அம்மன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் அனுமதி அளிக்குமாறு காவல்துறையிடம் த.வெ.க.,வினர் கேட்டனர்.

இந்நிலையில், விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு போலீசார் அனுமதி வழங்கியுள்ளனர். நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்கு வாடகை 50 ஆயிரம் ரூபாய், டெபாசிட் 50 ஆயிரம் ரூபாய் விஜய் தரப்பில் செலுத்தப்பட்டதால் இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட எஸ்பி சுஜாதா அனுமதி வழங்கினார்.

# எல்.எல்.ஆர். தர ரூ.1,000 லஞ்சம்; வாகன இன்ஸ், புரோக்கர் கைது

திருச்சி, டிச.15-

திருச்சி மாவட்டம், குண்டூரைச் சேர்ந்தவர் பழனியப்பன். ஓய்வு பெற்ற ராணுவ வீரரான இவர், டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறார்.

இவரது மையத்தில் இருந்து, திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் எல்.எல். ஆர்.,க்கு விண்ணப்பித்த இருவருக்கு உரிய கட்டணங்கள் செலுத்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் மணிபாரதியை, 45, அணுகியுள்ளார். அவரோ, 1,000 ரூபாய் லஞ்சம் கொடுத்தால் தான், அனுமதிக்க முடியும் என்று கூறியுள்ளார்.




லஞ்சம் கொடுக்க விரும்பாத பழனியப்பன், இது குறித்து திருச்சி லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி., மணிகண்டனிடம் புகார் அளித்தார். அவர்களின் அறிவுறுத்தல்படி, 1,000 ரூபாய் லஞ்சப்பணத்தை, வாகன ஆய்வாளர் மணிபாரதிக்கு, அங்கு புரோக்கராக இருக்கும் திலீப்குமார், 35, மூலம் கொடுத்துள்ளார்.

அதை மணிபாரதி வாங்கியபோது, லஞ்ச ஒழிப்பு போலீசார் அங்கு சென்று, கையும், களவுமாக அவரை பிடித்து கைது செய்தனர். லஞ்சப்பணமும் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், அவரது மேஜையில் இருந்த, 13,000 ரூபாய் மற்றும் பிராட்டியூரில் உள்ள மணிபாரதி வீட்டில் நடந்த சோதனையில், 1.90 லட்சத்தையும் லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்து விசாரிக்கின்றனர்.



# பெரும்பிடுகு முத்தரையர் தபால் தலையை வெளியிட்டார் துணை ஜனாதிபதி சிபிஆர்

புதுடில்லி, டிச.15-

மன்னர் பெரும்பிடுகு முத்தரையரை சிறப்பிக்கும் தபால் தலையை துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் (14ம் தேதி) வெளியிட்டார்.

டில்லியில் இன்று பெரும்பிடுகு முத்திரையர் நினைவு சிறப்பு தபால் தலை வெளியிடும் விழா நடந்தது. துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் தபால் தலையை வெளியிட்டார். மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில் நிர்மலா சீதாராமன் பேசுகையில், ''இந்த நிகழ்ச்சி தமிழகத்தில் நாம் எல்லோருக்கும் எடுத்துரைக்க வேண்டிய நிகழ்ச்சி. தமிழக மக்கள் தெய்வீகத்தை கொண்டாடக்கூடிய மக்கள். மோடி அரசு, தமிழகத்துக்கு நன்மை செய்யவும், தமிழகத்துக்கு பெருமை சேர்த்தவர்களை கொண்டாடவும் பல்வேறு பணிகளை செய்கிறது. இந்த முயற்சிகளைப் பற்றி நாம் தமிழக மக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும்,'' என்றார்.மட்டற்ற மகிழ்ச்சி

நயினார் நாகேந்திரன் பேசுகையில், "பெரும்பிடுகு முத்தரையரை வணங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பிரதமர் மோடி தமிழகத்திற்கு, ரூ.16 லட்சத்து 83 ஆயிரம் கோடிக்கு மேல் நிறைய நிதி வழங்கி பல்வேறு நன்மைகளை செய்துள்ளார். தமிழ் தேசியத்தை போற்றி மகிழ்ந்தவர்.இத்தகைய உதவிகளை செய்யும் பிரதமர் மோடிக்கு மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்து கொள்கிறேன். முத்தரையர் பற்றி நாலடியாரில் 295வது பாடலில் பாடி இருக்கிறார்கள். முத்தரையருக்கு தபால் தலை வெளியிடுவதில் உண்மையிலேயே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்,'' என்றார்.

# ஆளுக்கொரு வழியில் ஓபிஎஸ், தினகரன்! போகும் வழி தெரியாமல் நிற்கும் சசிகலா

சென்னை, டிச.15-

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவின் அத்தனை தலைவர்களும், “சின்னம்மா பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்று முதலமைச்சராக வரவேண்டும்” என்று மாய்ந்து மாய்ந்து பேட்டி கொடுத்தார்கள். அப்படிச் சொன்னவர்களில் அநேகம் பேர் இப்போது அவருக்கு எதிராக நிற்கிறார்கள்.



உள்ளுக்குள் விசுவாசம் வைத்திருக்கும் ஒருசிலரும் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இதனால் தனித்து விடப்பட்ட தலைவராகி இருக்கிறார் சசிகலா.

ஜெயலலிதா காலத்தில் அதிமுகவின் அதிகார மையமே சசிகலா குடும்பம் தான். அதனால் அந்தக் கட்சிக்கு நல்லதும் இருந்தது கெட்டதும் இருந்தது. இது தெரிந்து தான் சசிகலா தரப்பை ஒரேயடியாக ஒதுக்கிவைக்க முடியாமல் தவித்தார் ஜெயலலிதா.

அதே சமயம் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, சசிகலாவின் பின்னால் பயபக்தியுடன் வந்து நின்ற அதிமுக தலைவர்களுக்கு, அவர் சிறைக்குச் சென்ற பிறகு பயமும் பக்தியும் பறந்துவிட்டது. அதனால், அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் ஒரேயடியாக கட்சியைவிட்டே தள்ளிவைத்தார்கள்.

இருந்தாலும் அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாத சசிகலா சிறை மீண்டதிலிருந்தே, “அதிமுகவை ஒருங்கிணைப்பேன்... அம்மா ஆட்சியை மீண்டும் கொண்டுவருவேன்” என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். கேட்பதற்கு இது நன்றாக இருந்தாலும் ஒருங்கிணைப்புக்கான சாத்தியங்கள் தெரியவில்லை என்பது தான் நிதர்சனம்.

“அதிமுகவை ஒருங்கிணைப்பது தொடர்பாக பேசிவருகிறேன்” என திரும்பத் திரும்பச் சொல்லி வரும் சசிகலா, யாருடன் பேசுகிறேன்... என்ன பேசுகிறேன் என்பதை ‘சஸ்பென்ஸாகவே(!)’ வைத்திருக்கிறார்.

அதனால், என்றைக்காவது விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கையில் அவர் பின்னால் நின்ற ஒரு சிலரும் இப்போது தங்களுக்கான வழிகளைத் தேடி போய்விட்டார்கள்.

அண்மையில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வந்த சசிகலாவுடன் அவரது உதவியாளர் மட்டுமே வந்திருந்தார். மற்றவர்கள் எங்கே என்று கேட்டதற்கு, “சின்னம்மா தான் யாரையும் வரவேண்டாம்னு சொல்லிட்டாங்க” என்று சால்சாப்பு சொன்னார்கள்.

இந்தத் தேர்தலையும் விட்டுவிட்டால் சசிகலாவின் அரசியல் வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகி விடலாம். தினகரன், ஓபிஎஸ் பற்றி எல்லாம் பேசும் பாஜக, ஜெயலலிதாவுக்கு நெருங்கிய தோழியாக இருந்த சசிகலாவைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. சித்தியைப் பற்றி தினகரனும் கவலைப்படுவதில்லை.

தன்னை அரியணையில் அமர்த்தி அழகுபார்த்த சின்னம்மா பற்றிய பேச்சை ஓபிஎஸ்ஸும் எடுப்பதில்லை. இவர்கள் இருவரும் தங்களுக்கான வழியைத் தேடுவதில் பிஸியாக இருக்கிறார்கள். இவர்களை ஆளாக்கி பேராக்கிய சசிகலா தான் தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறார் பாவம்.

சசிகலாவின் இன்றைய நிலை குறித்து நம்மிடம் பேசிய அவரது ஆதரவாளர்கள் சிலர், ‘‘இன்று சின்னம்மாவுக்கும் தினகரனுக்கும் விசுவாசமாக இருப்பவர்களில் பலரும், அதிகாரத்தில் இருந்த போது அவர்களால் எந்தப் பலனும் அனுபவிக்காதவர்கள் தான்.

இவர்கள் இருவராலும் பலனை அடைந்தவர்கள் தான் இப்போது இவர்களுக்கு எதிராக கச்சைகட்டி நிற்கிறார்கள். அதனால் தினகரன் தனி வழி போக ஆரம்பித்து விட்டார். ஓபிஎஸ் அதிமுகவுக்குள் குடியேற அமித் ஷாவுக்கு அப்ளிகேஷன் போட்டுக் கொண்டிருக்கிறார். சின்னம்மா தான் போகும் வழி தெரியாமல் நிற்கிறார்’’ என்றார்கள்.

# போலி மருந்துகள் தயாரித்து விற்பனை; டில்லியில் இருவர் கைது

புதுடில்லி, டிச.15-

போலி மருந்துகளை தயாரித்து விற்பனை செய்து வந்த கும்பலை சேர்ந்த இரண்டு பேரை டில்லி போலீசார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

சட்டவிரோத இருமல் மருந்து தயாரிப்பு தொடர்பாக ஜார்க்கண்ட், குஜராத் உட்பட 5 மாநிலங்களில் அமலாக்கத்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது டில்லியில் போலி மருந்துகள் விற்பனை நடக்கிறது என்பது தெரியவந்தது. அதன் படி, டில்லியில் பல்வேறு இடங்களில் டில்லி போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தினர்.

அப்போது போலி மருந்துகளை தயாரித்து விற்பனை செய்து வந்த கும்பலை சேர்ந்த கவுரவ் பகத் மற்றும் ஸ்ரீ ராம் என்ற விஷால் குப்தா ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து போலிமருந்துகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் பின்னணியில் இருக்கும் மோசடி கும்பல் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

# புதிய கட்சி தொடங்கினார் ஓபிஎஸ்




சென்னை.டிச.15-
அதிமுகவில் பிரிந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று குரல் கொடுத்து வரும் ஓபிஎஸ் புதிய கட்சியை தொடங்கி உள்ளார். தான் நடத்தி வந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவை கழகமாக மாற்றி இருக்கிறார்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட ஓபிஎஸ் தனி அணியாக செயல்பட்டு வருகிறார். பிரிந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கூறி வரும் அவர், அதற்காக அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு என்ற பெயரில் ஒரு அமைப்பை துவங்கி செயல்பட்டு வந்தார்.

எப்படியும் அதிமுகவில் தம்மை இணைத்துக் கொண்டு விடுவது என்ற முனைப்பில் இருந்த ஓபிஎஸ், அதில் எவ்வித முன்னேற்றத்தையும் அடையாத நிலையில் இருந்தார். தொடர்ந்து கடும் அதிருப்தியில் இருந்த அவர், டிச.15ல் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து புதிய அறிவிப்பை வெளியிடுவதாக அறிவித்து இருந்தார்.

பின்னர் அந்த கூட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக அறிவித்து, டிச.24ல் எம்ஜிஆர் நினைவு தினத்தில் தமது அடுத்தக்கட்ட அரசியல் நகர்வை அறிவிப்பதாக தெரிவித்து இருந்தார்.

இந் நிலையில், திடீர் திருப்பமாக, புதிய கட்சியை ஓபிஎஸ் தொடங்கி உள்ளார். தான் நடத்தி வந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு என்ற அமைப்பை, அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருக்கிறார்.

ஆனால் தமது அமைப்பை கட்சியாக மாற்றி உள்ளதாக அவர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. மாறாக அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் என்ற பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் ஊழியர்களை திமுக அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அவர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்.

இதுநாள் வரையில், அமைப்பின் பெயரில் அறிக்கை வெளியிட்டு வந்த அவர், முதல் முறையாக அமைப்பை கழகமாக மாற்றி அறிக்கையாக வெளியிட்டு இருக்கிறார். இந்த அறிக்கையில் கட்சி தலைவர், பொதுச் செயலாளர் யார் என்பன உள்ளிட்ட எந்த விவரங்களும் இல்லை.

எப்போதும் போல கழக ஒருங்கிணைப்பாளர், முன்னாள் முதல்வர் என்று தமது பொறுப்புகளை குறிப்பிட்டு கையெழுத்தை மட்டும் ஓபிஎஸ் இட்டுள்ளார். தமது கட்சியை அவர் முறைப்படி தேர்தல் கமிஷனில் பதிவு செய்துவிட்டாரா என்பது குறித்தும் எவ்வித தகவல்களும் இல்லை.

இதற்கு முன்னர் கடந்த 14ம் தேதி தான் நடத்தி வரும் அமைப்பின் பெயரில் கடைசியாக ஓபிஎஸ் அறிக்கை வெளியிட்டு இருந்தார். அதில் தலைமைக் கழகம், 154, பசுமை வழிச்சாலை, ராஜா அண் ணா மலைபுரம்,சென்னை600028 என்ற முகவரி இடம்பெற்று இருந்தது.

தற்போது அமைப்பை கழகமாக மாற்றி அவர் வெளியிட்டு உள்ள அறிக்கையில் முகவரி மாறி இருக்கிறது. இதில் தலைமைக்கழகம், 38/31, 38/2, சேமியர்ஸ் ரோடு, நந்தனம், சென்னை 600035 என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆனால், இரண்டு அறிக்கையிலும் 93423 14327 என்ற செல்போன் எண் மட்டும் மாறாமல் இடம்பெற்றுள்ளது.

# தவெக வேட்பாளர்கள் அறிவிப்பா? ஊடக கணிப்புகளுக்கு புஸ்ஸி ஆனந்த் பதில்



திருச்செங்கோடு, டிச.15-
: "தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மட்டும் தான் அறிவிப்பார்" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்தார்.

தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடுவார் எனவும், அவரை மூத்த தலைவர்களான செங்கோட்டையன் மற்றும் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் இன்று அறிமுகப்படுத்துவார்கள் எனவும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், திருச்செங்கோட்டில் இன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், "ஒவ்வொரு தொகுதியிலும் தலைவரின் அறிவுறுத்தலின்படி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்று சோழிங்கநல்லூர், இன்று திருச்செங்கோட்டில் நடைபெறுகிறது.

இங்கே நான் ஒன்றை தெளிவுப்படுத்த விரும்புகிறேன். தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மட்டும் தான் அறிவிப்பார். ஊடகவியலாளர்கள் தயவு செய்து எதையாவது ஒன்றை போட்டுவிடாதீர்கள். வரும் 2026ம் ஆண்டு தேர்தலில் தவெக தலைவர் விஜய் முதல்வராக வருவார்.

தவெக தலைவர் விஜய்யை முதல்வராக அமர வைக்கும் வேலையை செங்கோட்டையன் செய்வார். செங்கோட்டையன் சொல்வதை நாங்கள் செய்வோம். எந்த கட்சியாவது எங்களைப்போல் மாநாடு நடத்த முடியுமா. மற்ற கட்சிகள் எல்லாம் ரூ.200, ரூ.300 கொடுத்து தான் கூட்டம் கூட்ட வேண்டும். ஆனால் விஜய் வருகிறார் என சொன்னால் கூட்டம் தானாக வந்து சேரும்.

ஈரோட்டில் வரும் 18ம் தேதி தவெக கூட்டம் நடைபெற உள்ளது. அன்று செங்கோட்டையன் கலக்குவார். மக்கள் தவெகவுக்கு ஓட்டுப்போட தயார். செங்கோட்டையன் தன்னிடம் பலர் செல்ஃபி எடுப்பதாக மேடையில் கூறினார். அதற்கு தலைவர் விஜய் தான் காரணம். தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தலைவர் விஜய் தான் வேட்பாளர்.

அனைத்து தொகுதிகளிலும் தவெக வெற்றி பெறுவதற்கு அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும். தலைவர் விஜய் உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார். தமிழக மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார்.

தமிழகத்தில் புயல் என எந்த பாதிப்பு வந்தாலும் தவெக பாடுபடும். தமிழகம் இக்கட்டான சூழலில் உள்ளது. தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து ஏமாற்றி விட்டார்கள் என மக்கள் நினைக்கின்றனர். அதன் வெளிப்பாடு தான் இங்கு கூடியுள்ள கூட்டம்.

யாருக்காவது தைரியம் இருந்தால் கூட்டம் போடுங்கள், அனைவரும் வாருங்கள் என சொல்லுங்கள் வருவார்களாக என பார்ப்போம். ஆனால் தவெக தலைவர் விஜய் வந்தால் கூட்டம் தானாக வந்துவிடும். மின் கட்டண உயர்வால் விசைத்தறிக் கூடங்கள் மூடுவிழா கண்டுவிட்டது. கூடிய விரைவில் தவெகவுக்கு அருமையான சின்னம் வழங்கப்பட உள்ளது. சின்னம் வந்த 15 நிமிடத்தில் உலகப் புகழ் பெறும்." என்றார்.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், மாவட்ட செயலாளர்கள் செந்தில்நாதன், சதீஸ், பிரதீப் உள்பட கட்சியின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டசபை தேர்தல் களத்தில் மிகவும் வீரியத்துடன் செயல்படணும்; நயினார் நாகேந்திரன் அறிவுறுத்தல்



சென்னை. டிச.15-
2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் களத்தில் மிகவும் வீரியத்துடன் செயல்பட வேண்டும் என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழகத்தில் 2026ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் அதற்கான ஆயத்தப் பணிகளுல் ஒன்றான 234 தொகுதிகளிலும் பூத் கமிட்டி மாநாடு, BLA 2 பயிலரங்கக் கூட்டம் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பற்றிய பயிலரங்கக் கூட்டம் மாநிலம் முழுவதும் தொடங்கியுள்ளது. டிசம்பர் 13,14,15 மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கூட்டங்கள், ஒரே சமயத்தில் நடைபெறுகிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்தையும் வெற்றிகரமாக வடிவமைத்து அதை செயல்படுத்தி வரும் தேசிய SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கமிட்டி உறப்பினர் மற்றும் தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை , மாநில துணைத் தலைவர் உள்ளிட்டோருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இது தமிழக பாஜவிற்கும், தேஜ கூட்டணிக்கும் கிடைத்த வெற்றிக்கான முதல் படி.

அனைத்து BLA-2 பூத் முகவர்களும் இந்த பயிலரங்கக் கூட்டத்தை முழுவதுமாக பயன்படுத்திக்கொண்டு 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் களத்தில் மிகவும் வீரியத்துடன் செயல்பட வேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.




# ஆஸ்திரேலியாவின் சிட்னி கடற்கரையில் துப்பாக்கிச் சூடு: பலி 12 ஆக அதிகரிப்பு

நியூ சவுத் வேல்ஸ், டிச.15-
ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள போண்டி கடற்கரையில் மாலை மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்தது.

சிட்னியில் உள்ள போண்டி கடற்கரையில் இன்று மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் கொல்லப்பட்டனர், இரண்டு போலீஸ் அதிகாரிகள், பெண்கள், குழந்தைகள் உள்பட பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் பல மாதங்களாக திட்டமிடப்பட்டதாகவும், குழந்தைகள் விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள போண்டி கடற்கரை பூங்காவில் நடந்த யூத மத பண்டிகையான ஹனுக்கா நிகழ்வை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்திய ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார், மற்றொருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு போலீஸ் காவலில் சிகிச்சை பெற்று வருகிறார். பாலத்தின் கீழ் ஒரு வெடிகுண்டு இருப்பதாக தகவல் வந்ததால், அந்தப் பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.

இரண்டு நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இந்தச் சம்பவத்தில் மூன்று துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டதாகவும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் வெடிமருந்து பெல்ட்களை அணிந்திருந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து பேசிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், " இது அதிர்ச்சியூட்டும் மற்றும் துயரமளிக்கும் நிகழ்வு. பாதிக்கப்பட்டவர்களுடன் எனது எண்ணங்கள் உள்ளது. இதுகுறித்து காவல் ஆணையர் மற்றும் நியூ சவுத் வேல்ஸ் பிரீமியருடன் பேசினேன். பொதுமக்கள் காவல்துறை வழிகாட்டுதலைப் பின்பற்றவேண்டும்" என்றார்

நியூ சவுத் வேல்ஸ் பிரீமியர் கிறிஸ் மின்ஸ் தனது அறிக்கையில், "போண்டியிலிருந்து வெளிவரும் தகவல்கள் மற்றும் படங்கள் மிகுந்த துயரமளிக்கின்றன. காவல்துறை மற்றும் அவசர சேவைகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன." என்றார்.

# காங்கிரசின் சித்தாந்தத்தை மக்கள் வலுப்படுத்த வேண்டும் : ராகுல் பேச்சு



புதுடில்லி, டிச.15-
'' நாட்டை பாதுகாப்பதற்காக காங்கிரசின் சித்தாந்தத்தை மக்கள் வலுப்படுத்த வேண்டும்,'' என காங்கிரஸ் எம்பி ராகுல் பேசினார்.

உண்மை வெல்லும்

ஓட்டுத் திருட்டுக்கு எதிராக டில்லி ராம் லீலா மைதானத்தில் காங்கிரஸ் பேரணி நடத்தியது. அதில் காங்கிரஸ் எம்பி ராகுல் பேசியதாவது: பாஜவிடம் அதிகாரம் உள்ளதால் ஓட்டுத் திருட்டில் ஈடுபடுகின்றனர். உண்மைக்கும், பொய்க்குமான போராட்டத்தில் தேர்தல் கமிஷன் பாஜ உடன் இணைந்து பணியாற்றுகிறது. தேர்தல் கமிஷன் என்பது நாட்டுக்கானது. மோடிக்கானது அல்ல என்பதை அந்த அமைப்பு நினைவில் வைத்திருக்க வேண்டும். காலதாமதம் ஆனாலும், உண்மையே நிச்சயம் வெல்லும்.

அகற்றுவோம்

மஹாத்மா காந்தி சத்தியமே பிரதானமானது என நம்பினார். ' சத்தியம், சிவம், சுந்தரம்', ' சத்தியமே வெல்லும்' ஆகியவற்றை நாம் கேட்டிருக்கிறோம். நமது கொள்கையும், நமது மதமும், சத்தியத்தை எல்லாவற்றுக்கும் மேலாக வைக்கின்றன. இன்று நாட்டில் நடந்து கொண்டிருக்கும் போராட்டமே இதுதான். உண்மையை நிலைநிறுத்தி, உண்மைக்கு பின்னால் நின்று இந்தியாவில் இருந்து நரேந்திர மோடி, அமித்ஷா, அரசை அகற்றுவோம்.

அவர்கள் ஓட்டை திருடுவார்கள். தேர்தலின் போது 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பார்கள். தேர்தல் கமிஷன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் கமிஷனர் என்ன செய்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடி சட்டத்தை நரேந்திர மோடி அரசு மாற்றியுள்ளது. நாட்டை பாதுகாக்கும் ஒரே சித்தாந்தமான காங்கிரசின் சித்தாந்தத்தை பலப்படுத்த வேண்டியது நாட்டு மக்களின் கடமை. இவ்வாறு ராகுல் பேசினார்.



■ கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுகளுக்கு கிரிக்கெட் கிட் வழங்கும்முன்னாள் அமைச்சரும், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட தேஜஸ் மஹாலில் 75 டீம் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் கிட் வழங்கினார். இந்நிகழ்ச்சியை தாமோதரன், ரஞ்சித் மற்றும் கௌதம் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இணைச்செயலாளர் சாஸ்திரி சீனிவாசன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் எஸ்.எம்.நாகராஜ், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ருத்ரேஸ்வரன், அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் அம்மாபட்டி துரைசாமி, மாவட்டசார்பு அணி நிர்வாகிகள் வனிதாமணி, அருண், உடுமலை நகர கழக செயலாளர் ஹக்கிம், குடிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பர்ராஜன், சின்னவீரம்பட்டி காளிமுத்து, சகுந்தலா மதிவானன், சரண்யாதேவி, காளிதாஸ், மினிடோர் சுப்பிரமணி, வார்டு செயலாளர்கள் இளங்கோவன், செந்தில், ஆட்டோ ரமேஷ் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர்.

# எனக்கு பிரதமரின் ஆசீர்வாதம் உள்ளது; பாஜ தேசிய செயல் தலைவர் நிதின் நபின் பேட்டி



புதுடில்லி. , டிச,15-
எனக்கு பிரதமரின் ஆசீர்வாதம் உள்ளது என பாஜ தேசிய செயல் தலைவர் நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

பாஜவின் தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பீஹார் அமைச்சர் நிதின் நபின் கூறியதாவது: இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மத்திய தலைமை, பிரதமர், உள்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் மத்திய தலைமையிலுள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு பிரதமரின் ஆசீர்வாதம் உள்ளது, அவர் வழங்கிய வழிகாட்டுதல பயன்படுத்தி கட்சியை மேம்படுத்துவேன். கட்சியினர் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உடன் பணியாற்றும்போது, கட்சியின் மூத்த தலைவர்கள் அதை எப்போதும் கவனத்தில் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இவ்வாறு நிதின் நபின் கூறினார்.

கட்சியின் புதிய செயல் தலைவராக நிதின் நபின் நியமனம் உடனடியாக அமலுக்கு வருவதாக பாஜ தெரிவித்துள்ளது. ஜனவரி 2020ம் தேதி முதல் பாஜ தேசியத் தலைவராக பணியாற்றி வரும் மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டாவுக்குப் பிறகு அவர் (நிதின் நபின்) இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

# சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் சொத்து முடக்கம்



சென்னை, டிச.15-
'சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ்' நிறுவனத் தின், 107 கோடி ரூபாய் சொத்துகளை மீட்ட அமலாக்கத் துறை, அவற்றை வங்கிகளிடம் ஒப்படைத்துள்ளது.

சென்னை சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனம், 2017ல், இந்தியன் வங்கியில் தவறான நிதிநிலை அடங்கிய ஆவணங்களை தாக்கல் செய்து, இரண்டு கட்டங்களாக, 240 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது.

எந்த காரணத்திற்காக கடன் பெறப்பட்டதோ, அதற்காக அப்பணம் பயன் படுத்தாமல், வேறு காரணங்களுக்காக முறைகேடாக பயன்படுத்தி, மோசடி செய்தது கண்டறியப் பட்டது.

இதனால், இந்தியன் வங்கிக்கு, 312.13 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட தாக, முதலில் சி.பி.சி.ஐ.டி., போலீசில் புகார் அளிக்கப் பட்டது. பின் வழக்கு, சி.பி.ஐ.,க்கு மாற்றப்பட்டது .

இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்த தால், அமலாக்கத் துறையும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்தியன் வங்கி புகாரில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்துக்கு சொந்தமான, 235 கோடி ரூபாய் சொத்துகளை முடக்கி, பிப்., 17ம் தேதி, இந்தியன் வங்கியிடம் அமலாக்கத் துறை ஒப்படைத்தது.

மீதமுள்ள, 40 கோடி ரூபாய் சொத்துகளை வங்கியிடம் ஒப்படைக்க, உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அவையும் கைப்பற்றப்பட்டு நேற்று ஒப்படைக்கப்பட்டன. இது வரை, 275 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள், இந்தியன் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

அதேபோல், தவறான நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தும், சரக்கு இருப்புகளை உயர்த்தி காட்டியும் ஆக்சிஸ் வங்கியிடம், 118.88 கோடி ரூபாயை, சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனம் கடன் பெற்றது. இதனால், 81.90 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட தாக, மத்திய குற்றப்பிரிவில், அந்த வங்கி புகார் அளித்தது.

இந்த வழக்கில் அமலாக்கத் துறை நடத்திய விசாரணையில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்தின், 74.06 கோடி ரூபாய் சொத்துகள், 2023ல் முடக்கப்பட்டன.

தற்போது, 66.93 கோடி ரூபாய் மதிப்பிலான நான்கு சொத்துகளை முடக்கி, ஆக்சிஸ் வங்கியிடம், அமலாக்கத் துறை நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்திடம் இருந்து, 107 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை கைப்பற்றி, வங்கிகளிடம் ஒப்படைத்து இருப்பதாக, அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

# குளிர் அலர்ட்: தமிழகத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி வரை குறைய வாய்ப்பு

சென்னை, டிச.15-

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் 2 நாட்களுக்கு குளிர் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் நாளை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.



தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 15, 16 தேதிகளில் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 17ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் 18, 19 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குளிர் அளவுகளின்படி, மலைப்பகுதியில் அதிகபட்சமாக ஊட்டியில் 7 டிகிரி, கொடைக்கானல், குன்னூரில் தலா 9 டிகிரி, ஏற்காட்டில் 10 டிகிரி, சமவெளிப் பகுதிகளில் அதிகபட்சமாக திருத்தணியில் 16 டிகிரி, வேலூர், தருமபுரியில் 17 டிகிரி, புதுச்சேரி, சேலத்தில் தலா 19 டிகிரி, சென்னை நுங்கம்பாக்கம், மீனம்பாக்கம், மாமல்லபுரம், கோவையில் தலா 20 டிகிரி குளிர் பதிவாகியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 2 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) ஓரிரு இடங்களில் வழக்கத்தைவிட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



■ என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பண்ணை கிணறு கோழிக்குட்டை ஆகிய பகுதிகளில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி முரளி அவர்கள் தலைமையில் பி.எல்.சி, பி.எல்2 கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் லோகநாயகி, நித்தியானந்தம், முருகானந்தம், சுரேஷ், குமாரசாமி, கௌதம், கார்த்தி, பிரகாஷ், பொன்வேல் மற்றும் பண்ணை கிணறு ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் அவர்கள் பேசும் போது கழக அரசின் சாதனைகளை விளக்கி பூத் வாரியாக வீடுவீடாக சென்று சாதனை புத்தகங்களை வழங்கிட வேண்டும் என்று தெருமுனைப்பிரச்சாரங்கள் கழக அரசின் சாதனைகளை விளக்கி பொது மக்களுடன் இணைந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். மீண்டும் தளபதியார் தலைமையில் கழக ஆட்சி அமையும் என சூழ் உரைத்தார்.



# திருப்பூர் மத்திய மாவட்டம் சார்பாக. என் வாக்கு ச்சாவடி. வெற்றிச்சாவடி பாக முகவர்கள் கூட்டம்

திருப்பூர், டிச.15-

மத்திய மாவட்டம் பொங்கலூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் நாச்சிபாளையம் பாகம் எண் 358.359.360 ஆகிய பாக முகவர்கள் கூட்டம் மத்திய மாவட்ட செயலாளர் க. செல்வராஜ் எம்எல்ஏ தலைமையில் ஒன்றிய செயலாளர் எஸ்.பாலுசாமி. முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டத் துணைச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.குமார்.பொங்கலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பி.கே.கனகராஜ்.ஒன்றிய அவைத் தலைவர் சண்முகம்.ஒன்றிய பொருளாளர் விஜய ரத்தினகுமார்.மாவட்ட பிரதிநிதி சண்முகம். மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சூர்யா.

மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் வஞ்சியப்ப குமார். மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ். கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிவசுப்பிரமணியம். இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கௌரிசங்கர்.ராம். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அருள்பிரகாஷ்.ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவானந்தம். மாணவரணி துணை அமைப்பாளர் பிரபு சங்கர்.

ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர். கிருஷ்ணபிரவின். நாச்சிபாளையம் சுந்தரமூர்த்தி,ரித்து சரவண பிரபு. மற்றும் பாக முகவர்கள் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

# கனடாவில் இந்தியர்கள் 2 பேர் சுட்டுக்கொலை

ஒட்டாவா, டிச.15-

கனடாவில் நடந்த தாக்குதலில் பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கனடாவின் தென்கிழக்கு எட்மண்டனில், பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் பஞ்சாபின் மான்சாவில் உள்ள உத்தத் சைதேவாலா கிராமத்தைச் சேர்ந்த குர்தீப் சிங் (27) மற்றும் ரன்வீர் சிங் (18) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




தொழில் வாய்ப்புகளைத் தேடி இரண்டு இளைஞர்களும் தனித்தனியாக கனடாவுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கு வேலை தேடி வந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தது விசாரணையில் தெரியவந்தது.

எட்மண்டன் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளதாக தெரிவித்துள்ளனர். கனடா போலீசார் வேறு சில பஞ்சாப் இளைஞர்களை சுற்றி வளைத்து இந்த விவகாரம் குறித்து விசாரித்து வருவதாக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# அமித் ஷா முதல் விஜய் வரை: தி.மலையில் உதயநிதி 'அட்டாக்' பேச்சு

திருவண்ணாமலை, டிச.15-

"பிஹாரில் வென்றுவிட்டோம் அடுத்த இலக்கு தமிழ்நாடு என்கிறார் அமித் ஷா. இதுபோன்ற எந்த மிரட்டலையும் எதிர்கொள்ள கருப்பு சிவப்பு படை தயாராக உள்ளது" என தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.



திருவண்ணாமலையில் இன்று வடக்கு மண்டல திமுக இளைஞரணி நிர்வாகிகள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு திமுக இளைஞரணி தலைவரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றுகிறார். இம்மாநாட்டில் திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய 6 மாவட்டங்களை சேர்ந்த 1.30 லட்சம் இளைஞரணி நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்று பேசிய உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "இன்று பல கட்சிகள் உறுப்பினர்கள் சேர்க்கவே தடுமாறுகின்றனர். ஆனால் திமுகவில் இன்று நாம் பூத் கமிட்டி வரை நிர்வாகிகளை நியமித்துள்ளோம். இன்று 6 மாவட்டங்களின் 1.30 லட்சம் பூத் கமிட்டி நிர்வாகிகள் இங்கு வந்துள்ளீர்கள்.

மாநாடு என்றால் நூற்றுக்கணக்கில் இளைஞர்களை திரட்டுவதே பல கட்சிகளுக்கு சவாலாக உள்ளது. இது கணக்குகாட்ட கூட்டப்பட்ட கூட்டமில்லை. எதிரிகள் கூடும் தப்புக்கணக்கை பொய்யாக்க கூடிய கூட்டம். இளைஞர்கள் என்றால் கட்டுபாடு இருக்காது, காட்டாறு போல கட்டுப்படுத்த முடியாது என்ற பிம்பம் இப்போது கட்டமைக்கப்படுகிறது.

ஆனால் நம் இளைஞரணி கூட்டம் மிகுந்த கட்டுப்பாடுள்ள கூட்டம். கட்டுப்பாடு இல்லாத ஒரு கோடி பேரை வைத்துக்கொண்டும் ஒன்றும் சாதிக்க முடியாது. உங்களைப் போன்ற கட்டுப்பாடுள்ள கூட்டம் தமிழகத்துக்கே பலம்.

நம் கட்சியினர் ஆதிக்கத்துக்கு அடிபணிந்தது கிடையாது. சமீபத்தில் குஜராத்தில் பேசிய அமித் ஷா, பிஹாரில் வென்றுவிட்டோம் அடுத்த இலக்கு தமிழ்நாடு என்கிறார். அமித் ஷாவுக்கும் அவரின் அடிமை கூட்டத்துக்கும் ஒன்று சொல்கிறேன். இதுபோன்ற எந்த மிரட்டலையும் எதிர்கொள்ள கருப்பு சிவப்பு படை தயாராக உள்ளது. அப்படிப்பட்ட நம்மை குஜராத்தில் உட்கார்ந்துகொண்டு மிரட்டி அடிபணிய வைக்க முடியாது.

நீங்கள் பிஹார், உ.பி. ம.பியில் வென்றிருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உங்களால் நுழைய முடியாது. பாஜக என்பது மதம் பிடித்த யானை. அந்த யானையை அடக்கும் அங்குசம் முதல்வர் ஸ்டாலின் கையில் உள்ளது. இது மோடிக்கு தெரியும். அதனால்தான் பழைய அடிமைகள், புதிய அடிமைகள் மூலம் தமிழகத்தில் நுழைய பார்க்கிறார்கள்.

அதிமுக பொதுக்குழு தீர்மானத்தில் இபிஎஸ்ஸை முதல்வராக்குவதாக தீர்மானம் போட்டுள்ளார்கள். அதிமுக இன்ஜின் இல்லாத கார். அந்த காரை பாஜக எனும் லாரி இழுத்துக்கொண்டு போகப்பார்க்கிறார்கள். பாசிச சக்தியிலிருந்து தமிழகத்தை காக்கும் ஆற்றல் திமுகவுக்கு மட்டுமே உள்ளது.

அதனால்தான் தமிழகத்தில் ஏதாவது கலவரத்தை செய்ய பாஜக நினைக்கிறது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இளைஞரணிக்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டுமென திமுக தலைவரை கேட்டுக்கொள்கிறேன். களத்தில் கடுமையாக நமது இளைஞரணி உழைக்க வேண்டும். வானவில் பார்க்க அழகாக இருக்கும், பார்க்க மக்கள் கூடுவார்கள். ஆனால், உதய சூரியன் தான் வெளிச்சம் தரும்." என்றார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு தீவீர திருத்தம் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் விஜய் நெஹ்ரா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணிகள் தொடர்பாக வாக்கு பதிவு அலுவலர்கள், உதவி வாக்குபதிவு அலுவலர்கள் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது



■ மதுரை மாவட்டத்தில் இலக்கியத் திருவிழா நடத்துவது தொடர்பாக, தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.



# கூடன்குளம் செட்டிகுளத்தில் தவெக தலைவர் விஜய் முதல்வராக வேண்டி 3 கிலோ எடையுள்ள அலகு குத்தி பால்குடம்

திசையன்விளை.டிச.15-

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அருகே செட்டிகுளம் இந்திரா நகரை சேர்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் கிளை கழக செயலாளர் இசக்கியப்பன் ( வயது48) இவர் வரும் 2026 ஆம் ஆண்டு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முதல்வராக வேண்டி 3கிலோ எடையும் 12 அடி நீளம் கொண்ட அலகு குத்தி பால்குடம் எடுத்தார்.

வாகன ஓட்டுநராக இருக்கும் இசக்கியப்பன் செட்டிகுளம் கடற்கரையில் இருந்து இந்திரா நகர் வரை மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு தமிழக வெற்றிக் கழகத்தின் சால்வை துண்டு அணிந்து பால்குடம் எடுத்து வந்தார். அங்குள்ள முத்தாரம்மன் கோவிலில் கார்த்திகை மாதத்தின் கடைசி நாளான இன்று நடந்த பால் குட ஊர்வலத்தில் நேர்த்தி கடனை நிறைவேற்றினார். இதில் ஏராளமான பக்தர்கள் தவெக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் முருகன் கோயில் அருகே 6 அடி ஆழத்திற்கு கடல் அரிப்பு: கடலில் இறங்க முடியாமல் பக்தர்கள் தவிப்பு

திருச்செந்தூர், ச,15-

அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மட்டுமே கடற்கரையில் அமைந்துள்ளது. இதனால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கடலில் புனித நீராடிய பிறகே சுவாமி தரிசனம் செய்கின்றனர். இந்நிலையில் கடந்த வாரங்களில் தென் தமிழக கடற்கரையோரப் பகுதியில் ஆங்காங்கே மழை பெய்தது.

அதன் பிறகு கடல் அலையில் சில நேரங்களில் சீற்றமும் ஏற்பட்டது. இதையடுத்து திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முகப்பு பகுதி கடற்கரையில் கடந்த 3 தினங்களாக அரிப்பு காரணமாக சுமார் 100 அடி நீளத்திற்கும், 3 அடி முதல் 6 அடி ஆழத்திற்கும் கடலில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பக்தர்கள் கடற்கரையில் கோயில் முன்புள்ள படிக்கட்டு பகுதியில் இருந்து கடலுக்குள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# தவறான ஆட்சிக்கு அதனைத் தேர்ந்தெடுத்த மக்களே பொறுப்பு" சீமான்

மதுரை, டிச.15-

தமிழகத்தில் நடக்கும் தவறான ஆட்சிக்கு ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என, மதுரையில் சீமான் கூறினார்.

சென்னையில் இருந்து ஈரோடு செல்ல விமானம் மூலம் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மதுரை வந்தார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தற்போது போராட்டம் நடத்துகின்றனர்.



இக்கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைகள் தான். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இது போன்ற போராட்டத்தில் மு.க.ஸ்டாலின் பங்கேற்றிருக்கிறார். நான் அரசு ஊழியர்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்து பங்கேற்கிறேன். ஓய்வூதியத்துக்குப் பயந்து பணி நிரந்தரம் செய்யாமல் ஆசிரியர்களை ஒப்பந்தம், பகுதி நேர பணியில் வைத்துள்ளனர்.

அரசு நிர்வாகத்தை முறையாக செயல்படுத்தவில்லை. ஓய்வு பெறும் வயது 58ல் இருந்து 60 ஆக அதிகரித்தது ஏன். ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் கொடுக்க உங்களிடம் நிதியில்லை. இது போன்ற சூழலில் படித்த இளைஞர்கள் அரசு வேலைக்கு போக முடியவில்லை. அரசுப் பணியென எதுவுமின்றி எல்லாவற்றையும் தனியார் முதலாளிகளிடம் ஒப்பந்தம் கொடுத்துள்ளனர். தூய்மைப் பணிகளும் தனியார் முதலாளிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது அரசு தான். தனியார் முதலாளிகள் லாபமின்றி எதையும் செய்வதில்லை. தமிழகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள ஆந்திரா முதலாளிகளுக்கு என்ன ஆசையா?

தமிழக போக்குவரத்து தொழிலாளர்களிடம் பிடித்த தொகை ரூ.7500 கோடி என்ன ஆனது. இதைக் கேட்டு எத்தனை முறை போராடினார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது, நாங்கள் வந்தவுடன் நிறைவேற்றுவோம் எனச் சொல்கிறீர்கள். ஆளுங்கட்சியாக வந்தபிறகு தூக்கி தூரப் போடுகிறீர்கள். தவறான ஆட்சி நடக்குது என்றால் அதற்கு ஆட்சியாளர் பொறுப்பல்ல. ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸும், கம்யூனிஸ்ட்டும் அதிக இடங்களை வென்று இருந்தாலும், நம்ம ஊர் அரசியலைப் பேசவேண்டும். இவ்வாறு சீமான் கூறினார்.

அதிமுகவில் அதிருப்தியில் இருக்கும் முக்கியத் தலைவர்களை தவெக பக்கம் கொண்டு வந்து, அக்கட்சியை வலுப்படுத்துவேன் என, செங்கோட்டையன் கூறுவது குறித்து செய்தி யாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீமான் பதிலளிக்காமல் சிரித்துக்கொண்டே "கல்யாணத்துக்கு செல்கிறேன்" எனக் கடந்துவிட்டார்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000